FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~குந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

C 8165110

1. District : திருநெல்வேலி மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் காவல்நிலையக்கண்காணிப்பு பிரிவு Year: 2026 ஆண்டு FIR No.: 05/2026 மு.த.அ. எண் Date: 04.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 BNSS Sections பிரிவுகள்: 7(a) r/w 106
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 Date to :
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 10.00 hrs to Time to : 16.00 hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 14.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்துமூலமாக
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகம், ஸ்ரீபுரம், திருநெல்வேலி மாவட்டம். 5 கி.மீ மேற்கு.
   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.தங்கராஜ், தந்தை / கணவர் பெயர் திரு.T.மகாலிங்கம்
   (c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : 27.03.1970 Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address :
   தொழில் துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் முகவரி திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைத்தவும்) 1) திரு.அசோக்குமார், கண்காணிப்பு பொறியளர், திருநெல்வேலி மாநகராட்சி, 2) திரு.ராமநாதன், இளநிலை பொறியாளர், திருநெல்வேலி மாநகராட்சி, 3) திருமதி.கலைஜோதி, இளநிலை உதவியாளர், பொறியியல் பிரிவு, திருநெல்வேலி மாநகராட்சி, 4) திருமதி.தமிழ்மீனா, வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம், பொறியியல் பிரிவு, திருநெல்வேலி மாநகராட்சி, 5) திரு.சுப்பையா, வாகன ஓட்டுநர், உதவி ஆணையர் (நிர்வாகம்), திருநெல்வேலி மாநகராட்சி, 6) திரு.சிவகுமார், துப்புரவு பணி மேற்பார்வையாளர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி மாநகராட்சி, 7) திரு.சப்பாணி (எ) குமார், செயல்திறன் பணியாளர், வரிவசூல் மையம், பேட்டை, திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி மாநகராட்சி, 8) திரு.ராமலிங்கம், ஓய்வு பெற்ற தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக துணை தலைமை அகநிலை தணிக்கை அலுவலர் 9) திரு.ஜாண் ஸ்டீபன், த/பெ.தங்கதுரை, கதவு எண்.1/91G6, அபிராமி நகர், சின்னாம்பாளையம், பொள்ளாச்சி மற்றும் 10) திரு.சங்கர் கணேஷ், த/பெ.காந்தி, கதவு எண்.41B, MGP கீழத்தெரு, பேட்டை, திருநெல்வேலி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Does Not Arise

10 Total value of properties stolen / involved : Does Not Arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Does Not Arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 04.07.2026-ம் தேதி சுமார் 14.00 மணிக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 03.07.2026-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. பெறுனர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள பொறியியல் பிரிவு அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள பொறியியல் பிரிவு அலுவலக ஊழியர்கள் மாநகராட்சியின் பணிகளுக்கான பட்டியல் தொகைகளை சரிபார்த்து ஒப்புதல் வழங்க இடைத்தரகர்கள் மூலமாக லஞ்சப்பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில்,

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed W.D. Robin Gnana Singh Rajan Rank Inspector to take up the investigation / Refused Investigation / transferred to PS. .....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

4.7.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

4/7/26

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

4.07.26
14.30 hrs.

Name பெயர் E.MCCLARINE ESKHOL
Rank நிலை ..... No. எண் .....

திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள பொறியியல் பிரிவு அலுவலகத்தில் மதியம் 16.00 மணி முதல் 21.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த கண்காணிப்பு பொறியாளர் திரு.அசோக்குமார் என்பவரை சோதனை செய்த போது, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.3,200/-ம், இளநிலை பொறியாளர் திரு.ராமநாதன் என்பவரை சோதனை செய்த போது, அவரது முன்பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் பர்சில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.3,100/-ம், இளநிலை உதவியாளர் திருமதி.கலைஜோதி என்பவரை சோதனை செய்த போது, அவரது ஹேன்ட் பேக்கில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.1,600/-ம், வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம் திருமதி.தமிழ்மீனா என்பவரை சோதனை செய்த போது, அவரது ஹேன்ட் பேக்கில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.3,800/-ம், திருநெல்வேலி மாநகராட்சி. உதவி ஆணையர் (நிர்வாகம்) அவர்களது வாகன ஓட்டுநர் திரு.சுப்பையா என்பவரை சோதனை செய்த போது, அவரது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.4,500/-ம், திருநெல்வேலி மண்டல, திருநெல்வேலி மாநகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.சிவகுமார் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேண்ட்டின் பின்பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.12,100/-ம், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், பேட்டை வரிவசூல் மைய செயல்திறன் பணியாளர் திரு.சப்பாணி (எ) குமார் என்பவரை சோதனை செய்த போது, அவரது கையில் வைத்திருந்த மஞ்சள் பையில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.8,700/-ம், ஓய்வு பெற்ற தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக துணை தலைமை அகநிலை தணிக்கை அலுவலர் திரு.ராமலிங்கம் என்பவரை சோதனை செய்த போது, அவரது பின் பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.30,800/-ம், தனிநபரான திரு.ஜாண் ஸ்டீபன் என்பவரை சோதனை செய்த போது, அவரது முன்பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.6,800/-ம் மற்றும் மற்றொரு தனிநபரான திரு.சங்கர் கணேஷ் என்பவரை சோதனை செய்த போது, அவரது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.22,000/- ஆக மொத்தம் பணமாக ரூ.96,600/- மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், அவை தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் அல்லது கையூட்டாக மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை 03.07.2026-ம் தேதி மதியம் 16.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.அசோக்குமார் மற்றும் மேற்குறிப்பிட்ட ஒன்பது நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் (M.தங்கராஜ்) துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி (04.07.2026)

Sir, Received the complaint today on 04.07.2026 at 14.00 hrs and registered a case in

Tirunelveli V&AC, Cr.No.05/2026 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 r/w 106 BNSS on 04.07.2026 at 14.00 hrs Sd.E.Mcclarine Eskhol, ADSP, V&AC, Tirunelveli dt 04.07.2026. Proceedings பின்வருமாறு:- 03.07.2026-ம் தேதி திருநெல்வேலி மாநகரம், திருநெல்வேலி ஜங்சனில் இருந்து மேற்கு நோக்கி திருநெல்வேலி டவுண் செல்லும் சாலையில் ரோட்டின் தெற்குபுறம், வடக்கு பார்த்து அமைந்துள்ள திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள பொறியியல் பிரிவை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 03.07.2026-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் பொறியியல் பிரிவில் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் பணிகளுக்கான பட்டியல் தொகைகளை சரிபார்த்து ஒப்புதல் வழங்க இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், பெண் தலைமை காவலர்கள் திருமதி.சமுத்திரக்கனி, திருமதி.சரஸ்வதி மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மதியம் சுமார் 15.30 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0990-ல் புறப்பட்டு வண்ணாரப்பேட்டை வழியாக வந்து திருநெல்வேலி ஜங்சனில் இருந்து மேற்கு நோக்கி திருநெல்வேலி டவுண் செல்லும் சாலையில் சாப்டர் பள்ளியை அடுத்து மேற்கு பக்கம் வடக்கு பார்த்து வாசல் கொண்ட திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக சுமார் 16.00 மணிக்கு உள்ளே வந்தும், தெற்கு பார்த்து வாசல் கொண்ட பிரமாண்ட வராண்டாவின் வழியாக உள்ளே வந்து இடதுபுறம் படிக்கட்டை அடுத்து தெற்கு பக்கம் மேற்கு பார்த்து வாசல் கொண்ட பொறியியல் பிரிவு அறைக்கு உள்ளே வந்து மேற்படி அறையின் வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சுப்பையா, த/பெ.சப்பாணி, திருநெல்வேலி மாநகராட்சி. உதவி ஆணையர் (நிர்வாகம்) அவர்களது வாகன ஓட்டுநர், என்பவரை விசாரணை செய்தபோது அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.4,500/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.4,500/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சப்பாணி (எ) குமார், செயல்திறன் பணியாளர், பேட்டை வரிவசூல் மையம், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி மாநகராட்சி என்பவரை விசாரணை செய்தபோது அவர் கையில் வைத்திருந்த மஞ்சள் பையில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து அவரிடம் கேட்க, அவர் இன்றைய வரி வசூல்

மையத்தின் வசூல் தொகை ரூ.56,972/-ஐ மாநகராட்சியில் உள்ள பாங்க் ஆப் பரோடாவில் செலுத்த வந்ததாக கூறினார். அவரிடம் இன்றைய வசூல் தொகை சரிபார்க்கப்பட்டு வசூல் தொகை ரூ.56,972/- போக அவரிடமிருந்த பணம் ரூ.8,700/-ஐ குறித்து விசாரித்தபோது, அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.8,700/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வசூல் தொகை ரூ.56,972/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருநெல்வேலி மண்டல, திருநெல்வேலி மாநகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர், திரு.சிவகுமார் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் களப்பணியாளர் என்பதால் வருகைப்பதிவேட்டில் கையெழுத்து செய்ய வந்ததாக கூறினார். மேலும் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பேண்ட்டின் பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் கத்தையாக பணம் ரூ.12,100/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.12,100/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ஜாண் ஸ்டீபன், த/பெ.தங்கதுரை, கதவு எண்.1/91G6, அபிராமி நகர், சின்னாம்பாளையம், பொள்ளாச்சி என்பவரை விசாரணை செய்தபோது அவர் தனது ஆண் குழந்தையின் பிறப்பு சான்றிதழில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி விண்ணப்பிக்க வந்ததாகவும், அதுதொடர்பாக தான் கையில் வைத்திருந்த 03.07.2026-ம் தேதியிட்ட விண்ணப்ப கோப்பை ஆஜர் செய்தார். மேற்படி விண்ணப்ப கோப்பை நகல் எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது முன்பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.6,800/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.6,800/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சங்கர் கணேஷ், த/பெ.காந்தி, கதவு எண்.41B, MGP கீழத்தெரு, பேட்டை, திருநெல்வேலி என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் கிரையம் பெற்ற இடத்திற்கு புதிய காலிமனை வரி விதிப்பு செய்து வரி செலுத்த வேண்டி வந்ததாகவும், அது தொடர்பாக தான் கையில் வைத்திருந்த ஏழு தாள்களை ஆஜர் செய்தார். அந்த ஏழு தாள்களும் நகல் எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.22,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.22,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ராமலிங்கம், த/பெ.கதிர்வேல், கதவு எண்.9, குமரன் நகர், ஆவடி, சென்னை என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் ஓய்வு பெற்ற தமிழ்நாடு

மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக துணை தலைமை அகநிலை தணிக்கை அலுவலர் என்று கூறினார். இது தொடர்பாக அவர் தனது சட்டை பையில் வைத்திருந்த அவர் பெயரில் உள்ள அடையாள அட்டை எண்.6736-ஐ ஆஜர் செய்தார். அந்த அடையாள அட்டை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் இந்த அலுவலகம் வந்த காரணம் குறித்து கேட்க தனது மகன் விமல் சாம்சிங் என்பவரின் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்காக அலுவலகம் வந்ததாக கூறினார். மேலும் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பின் பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.30,800/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.30,800/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ஆனந்த், த/பெ.முருகன், கதவு எண்.35A, கோவில் தெரு, பழைய பேட்டை, திருநெல்வேலி என்பவரை விசாரணை செய்தபோது அவர் RVP Enterprises-ல் Site Engineer-ஆக வேலை செய்வதாகவும், தங்கள் நிறுவன கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு பில் பற்றி விசாரிக்க வந்ததாக கூறினார். மேலும் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டை முன்பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.150/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் தனது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாக கூறினார். எனவே மேற்படி விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் கையில் வைத்திருந்த ஆவணத்தை பார்வையிட்டதில் 1) M.Book No.1589 of the Office of Tirunelveli Municipal Corporation மற்றும் 2) Work File relating to the work of Re-laying of CC Pavement at Ramalinga Nagar and six other places for an estimate amount of Rs.77.25 lakhs காணப்பட்டது. மேற்படி இரண்டு கோப்புகளும் நகல் எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி வராண்டாவின் இடது பக்கம் தெற்கு பார்த்து வாசல் கொண்ட பொறியியல் பிரிவு தொழில்நுட்ப பிரிவு அறையை சோதனை செய்ய அதில் வாசலின் இடதுபக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.வீரபாபு, தொழில்நுட்ப உதவியாளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பேன்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.350/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.350/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அடுத்து மேற்கு பக்கம் தெற்கு பார்த்து உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திரு.முசம்மில் அகமது நூகு, தொழில்நுட்ப உதவியாளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டையின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,410/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும்,

செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,410/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு பின்புறம், வடக்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.கார்த்திக் குமார், செயல்திறன் பணியாளர் நிலை-II-ஐ விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டையின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.510/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.510/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம், மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.மாரியப்பன், தொழில்நுட்ப உதவியாளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டையின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,000/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி தொழில்நுட்ப பிரிவு அறைக்கு எதிரே வடக்கு பக்கம் வாசல் கொண்ட ஸ்மாட் சிட்டி அறையை பார்க்க அதில் யாரும் இல்லை.

மேற்படி தொழில்நுட்ப பிரிவு அறைக்கு கிழக்கு பக்கம் உள்ள கேபினை சோதனை செய்ய அதில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.கலைஜோதி, இ-2 பிரிவு, இளநிலை உதவியாளரை பெண் தலைமை காவலர்கள் திருமதி.சரஸ்வதி மற்றும் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.1,600/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,600/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு வடக்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.தமிழ்மீனா, வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம் என்பவரை பெண் தலைமை காவலர்கள் திருமதி.சரஸ்வதி மற்றும் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.3,800/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.3,800/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி கேபினின் தெற்கு பக்கம் உள்ள அறையில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட

திரு.கைலாஷ் நாத், இளநிலை உதவியாளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.620/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.620/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு தெற்கு பக்கம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.கார்த்தி (எ) கந்தசாமி, வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டையின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.400/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.400/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு தெற்கு பக்கம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி முத்துசெல்வி, வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம் என்பவரை பெண் தலைமை காவலர்கள் திருமதி சரஸ்வதி மற்றும் திருமதி சமுத்திரக்கனி உதவியுடன் விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.20/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.20/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு தெற்கு பக்கம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி கிரேஸ் சுஷ்மா, வரைவாளரை பெண் தலைமை காவலர்கள் திருமதிசரஸ்வதி மற்றும் திருமதி சமுத்திரக்கனி உதவியுடன் விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,935/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,935/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி திரு.கைலாஷ் நாத் என்பவரது இருக்கைக்கு பின்புறம், மேற்கு பக்கம் மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி சந்தனமாரி, வெளி கொணர்வு பணியாளர், தற்காலிகம் என்பவரை பெண் தலைமை காவலர்கள் திருமதி சரஸ்வதி மற்றும் திருமதி சமுத்திரக்கனி உதவியுடன் விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.100/- இருந்தது. மேற்படி பணம்

குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.100/-, திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு தெற்கு பக்கம் மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.முகமது அசாருதீன், தொழில்நுட்ப உதவியாளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவரிடம் எந்த பணமும் இல்லை. எனவே அவரிடமிருந்து எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.

மேற்படி அறைக்கு கிழக்கு பக்கம் வடக்கு பக்க வாசல் கொண்ட அறையில் வடக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ராமநாதன், இளநிலை பொறியளரை விசாரணை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது முன்பக்க இடது பேண்ட் பாக்கெட்டில் பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.3,100/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.3,100/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறைக்கு வடக்கு பக்கம் மேற்கு பார்த்து வாசல் கொண்ட செயற்பொறியாளர் அறையை சோதனை செய்ய அதில் யாரும் இல்லை.

அதுசமயம் மேற்படி பொறியியல் பிரிவுக்கு தெற்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல் கொண்ட கண்காணிப்பு பொறியளர் அறைக்கு திரு.அசோக்குமார் என்பவர் வந்த தகவல் அறிந்து மேற்படி கண்காணிப்பு பொறியாளர் திரு.அசோக்குமாரை அவரது அலுவலகத்தில் வைத்து சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் கத்தையாக பணம் ரூ.3,200/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.3,200/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (03.07.2026) இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். M.தங்கராஜ், திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tirunelveli and copies sent to concerned higher officials.

4/7/26
ADSP, VSAC,
Tirunelveli.